# ஆயுதப் போராட்டம் தீவிரமடைகிறது
# பல முனைகளில் புலிகள் தாக்குதல்
# இராணுவத்துக்குப் பலத்த உயிர்ச்சேதம்



1984 ஆகஸ்ட் மாதத்தில் தமிழீழத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டம் விஸ்தரிப்படைந்தது. சிங்கள இனவாத இராணுவம் வடக்கில் கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாத வெறியாட்டத்தை எதிர்த்து எமது விடுதலை இயக்கத்தின் கெரில்லா அணிகள் பல முனைகளில் ஆயுதப் படைகளுடன் மோதி எதிரிக்கு பலத்த உயிர்ச் சேதத்தை விளைவித்தனர். வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய முனைகளில் விடுதலைப்புலி வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள அரச படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். பலமுனைகளில் பலத்த பதிலடிகள் வாங்கி பதட்டமடைந்த சிங்கள இராணுவத்தினர், வழமைபோல கோழைத்தனமாக தமது ஆவேசத்தை அப்பாவி வெகுசனம்மீது கட்டவிழ்த்துவிட்டு தாம் ஒரு கட்டுப்பாடற்ற காடையர் கூட்டம் என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனம் புரிந்துவிட்டு தண்டனை பெறுமல் தப்பிவிட முடியாது என்பதனை சிங்கள ஆயுதப் படைகளுக்கு எமது விடுதலை வீரர்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். நாம் ஓரிடத்தில் மட்டும் எதிரியைத் தாக்கிவிட்டு ஒளிந்துகொள்ளவில்லை. பலமுனைகளில் எதிரியை எதிர்கொண்டு சமரிட்டிருக்கிறோம். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் எதிரியைத் தாக்கிக் கதிகலங்கச் செய்யும் இராணுவ பலம் எமக்குப் பெருகி வருகிறது என்பதைச் சிங்கள அரசு இப்போது உணர்ந்து வருகிறது. அநியாயமாக எமது மக்களைக் கொன்று குவிக்கும் இந்த இனவெறி கொண்ட இராணுவத்தை பூண்டோடு அழிக்கும்வரை எமது ஆயுதப் போராட்டம் ஓய்ந்துவிடப் போவதில்லை.

ஒடுக்கப்படும் மக்களின் தேசிய சுதந்திரப் போரை பயங்கரவாதம் எனப் பறைசாற்றிக் கொண்டு, கெரில்லாப் போர் முறைக்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஈடுகொடுக்க முடியாது, வெகுசனம் மீது பழி தீர்த்துக்கொள்ளும் சிங்கள
அரசின் போர்முறைத் திட்டமானது அப்பட்டமான இனக் கொலையை
இலக்காகக் கொண்டது என்பதனை இன்றைய நாகரிக உலகம் நன்கு
உணர்ந்துவிட்டது. அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்துவிட்டு,
'பயங்கரவாதிகளை' அழித்துவிட்டோம் என அத்துலத்முதலி அவிழ்த்து
விடும் அபாண்டமான பொய்களை உலக சமுதாயம் இன்று நம்பப் போவ
தில்லை. மனித குலத்தால் ஒதுக்கப்பட்ட சர்வதேச நாசகாரச் சக்திகளின்
உதவியுடன் ஈழத் தமிழினத்தை படிப்படியாக ஒழித்துக்கட்டும் சிங்கள
அரசின் இனப் படுகொலைகளை இனிப் பொறுத்துக்கொள்ளப் போவதில்லை
என பாரத நாடும் எச்சரித்திருக்கிறது. உலக சமூகத்தால் அந்நியமாக்கப்
பட்டு ஆட்டம்காணும் சிங்கள இனவாத அரசு நீண்டகாலம் நிலைத்து
நிற்கப் போவதில்லை. ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக்கி,
ஜெயவர்த்தன அரசுக்கு குழிபறிப்பது எமது விடுதலை இயக்கமாக இருக்கு
மென்பதை நாம் உறுதியாக உலகிற்கு எடுத்துக் கூற விரும்புகிறோம்.

விடுதலைப்புலி இயக்கத்தின் சமீபத்திய இராணுவ வெற்றிகளை
மூடி மறைத்து, எமது போராளிகள் பலர் கொல்லப்பட்டதாக சிங்கள
அரசு விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து வருகிறது.
ஆனால் உண்மையில் நடந்ததென்ன? சிங்கள ஆயுதப் படைகள் பல
இடங்களில், பலத்த பதிலடிகள் வாங்கி, என்றுமில்லாதபடி பெரிய
உயிர்ச் சேதத்தை அடைய நேரிட்டது. எமது இராணுவ நடவடிக்கைகளின்
விவரத்தைக் கீழே தருகிறோம்.